மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, தென்னை மரம் ஏறுகிறவர்கள் கள் இறக்குவதற்காக ஏறுகிறார்கள். கள் இறக்குவதற்காக தொழிலாளி மரம் ஏறி, விபத்துக்குள்ளானல், சட்டப்படி கன்ட்ராக்டர்கள்தான் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். கன்ட்ராக்டர்கள்தான் தொழிலாளிகளோடு இது விஷயமாக ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I know from the Hon. Minister whether there is a proposal to give compensation to the persons who meet with accidents even though they are not members of a co-operative society?

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, the Government have already passed orders in that respect, in accordance with the proposal mentioned by the hon. Members.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது, கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக இல்லாதிருந்தாலும் கூட அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வழி செய்திருக்கிறது என்று கூறினார்கள். கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக இல்லாத முறையில் எத்தனைபேருக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், எத்தனை பேர் என்று சொல்ல முடியும்.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, தென்னை மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு இடத்திற்கு இடம் கூலி வித்தியாசம் இருக்கின்ற காரணத்தினாலே அதை ஒழுங்குபடுத்துவதற்கு நம்முடைய அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தொழிலாளரின் கூலியைப்பற்றித் தனிக் கேள்வி எழுப்புவதாக இருந்தால் தொழிலாளர் நல அமைச்சரிடம் கேட்கவேண்டும்.

பழம் ஏற்றுமதி

*284 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1971-72-ம் ஆண்டில், தமிழ்நாட்டிலிருந்து சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஆரஞ்சின் மதிப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டில், இதுவரையிலும், தமிழ்நாட்டிலிருந்து, சிங்கப்பூருக்கு ஆரஞ்சு ஏற்றுமதி செய்யப்படவில்லை. ஆனல் 1970-71-ஆம் ஆண்டில் (ஏப்ரல் 1970 முதல் மார்ச்சு 1971 முடிய) 3.987 மெட்ரிக் டன் எடையுள்ளதும், ரூ. 7,974 (இன்ஷ்யூரன்ஸ் மதிப்புடன் கூடிய விலை) மதிப்புள்ளதுமான ஆரஞ்சுப் பழங்களை சென்னையிலிருந்து சிங்கப்பூருக்கு எஸ்.எஸ். ரஜுலா என்ற கப்பல் மூலம் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனின் சென்னையிலுள்ள கிளை ஏற்றுமதி செய்துள்ளது. 1971-72-ஆம் ஆண்டின் ஆரஞ்சு ஏற்றுமதி, அப்பழங்களை சிங்கப்பூரில் உண்ணுவோரது விருப்பத்தையும் அப்பழங்களின் விலை மலிவையும் பொறுத்தது. இது இனிமேல்தான் அறியப்படவேண்டிய தொன்றாகும்.

1971 டிசம்பர் 11]

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் உற்பத்தியாகின்ற பழவகைகள் அயல்நாடுகளிலேயிருந்து நமக்கு அந்நியச் செலாவணியினை ஈட்டுகின்ற வகையிலே இருக்கின்றன. காஷ்மீர் போன்ற மாநிலங்களிலே உள்ளவர்கள் அயல்நாடுகளிலே இருக்கின்ற தூதுவர்களோடு தொடர்புகொண்டு அவர்களுடைய துணையுடன் ஆங்காங்கு ஷோ ரூம்ஸ் வைத்து பழவகைகளுக்கு நல்ல விளம்பரம் கொடுத்து விற்பனை பெருகியிருக்கிறது. அதைப்போன்று நம்முடைய மாநில அரசாங்கமும் மத்திய அரசின் துணையுடன் அந்த அந்த நாடுகளில் உள்ள தூதுவர்களோடு தொடர்பு கொண்டு நம் தமிழகத்தில் உற்பத்தியாகும் பழவிற்பனையை அதிகப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் ஆரஞ்சுப் பழம் ஏற்றுமதி செய்யப்படும் அளவிற்கு அதிகமாக இல்லை, மைசூர், கூர்க் முதலிய இடங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஆரஞ்சு சென்னைத் துறைமுக வாயிலாக வெளிநாடுகளுக்கு அனுப்படுகின்றது. 1970-71, 1971-72 ஆம் ஆண்டுகளில் வேறு எந்தவிதமான பழங்களும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. பழ அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திராட்சை பயிரிட, ஒரு ஏக்கருக்கு ரூ. 1,500 வீதம் ஒரு நபருக்கு ரூ. 6,000 மேற்படாமலும், மற்ற பழங்கள் பயிரிட, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 வீதம் ஒரு நபருக்கு ரூ. 2,000-க்கு மேற்படாமலும் நீண்டகாலக் கடன்கள் வழங்கப்படுகின்றன. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைப் பொறுத்தவரையில் சீனு, பார்மோசா, ஆஸ்திரேலியா, இஸ்ரேல், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து ஆரஞ்சுப் பழத்தை சிங்கப்பூர் சந்தையில் விற்பனை செய்ய போட்டி அதிகமாக உள்ளது. வெளிநாட்டு வியாபாரிகள் பழத்திற்குரிய தொகையை வாங்குவோரிடத்து விற்ற பின்பே செலுத்துகிறார்கள். மேலும் இப்பழங்கள் எளிதில் அழியும் தன்மைவாய்ந்தவை. ஆகவே உடனடியாகச் செய்வதற்கு இயலாது.

Fruit Preservation Unit in Coimbatore.

* 285 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of Government to open a fruit preservation unit in Coimbatore; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் பழத்தோட்டங்கள்.

* 286 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழத்தோட்ட அபிவிருத்தி (Horticultural Development Scheme)) திட்டத்தின் கீழ் வட ஆர்க்காடு மாவட்டத்தில் சென்ற ஆண்டு எவ்வளவு பேருக்கு எவ்வளவு கடன் தொகை அளிக்கப்பட்டது ?

(இ) எத்தனை ஏக்கரில் பழத்தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன?